Registered as a Newspaper in Sri Lanka No. A [illegible]

# ஐக்கிய தீபம்

தேசீய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர் : 30

இதழ் : 4

மார்கழி

1974

யாழ்ப்பாணம்

## இந்த இதழில்....

○ ஆசிரியர் தலையங்கம்

○ இலங்கைக் கூட்டுறவு இயக்கம் :
தோற்றுவாயும் வளர்ச்சியும்

○ மாவட்ட அபிவிருத்திச் சபைகள்:
அவற்றினை உருவாக்கிச் செயற்படுத்துவதற்க
வழிகாட்டுக் குறிப்புகள்

○ ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை
திருவாக அறிக்கை (7-3-1973—25-5-1974

ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 30 || யாழ்ப்பாணம், மார்கழி 1974 || இதழ் 4

# கூட்டுறவும் அபிவிருத்தியும்

கள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தெங்கு பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் என பெயர் மாற்றப்பட்டுள்ள செய்தி கூட்டுறவாளர்களுக்கு மகிழ்ச்சியளிக்காதிருக்க முடியாது.

பாரம்பரிய தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளரை மீட்பதற்கு கூட்டுறவே மார்க்கம் என்பதனைற்றான் இச்சங்கங்கள் உருவாகுவதற்கான வரலாற்று நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இன்று இச்சங்கங்கள் பொருளாதார ரீதியாக வெற்றியீட்டியுள்ளன என்பதை உத்தியோக பூர்வமான புள்ளி விபரங்கள் எண்பித்துள்ளன. அரசாங்கத்திற்கும் சம்பந்தப்பட்ட தொழிலாளருக்கும் இச்சங்கங்கள் நன்மையளித்துள்ளன என்பது மறுக்க வொண்ணாத உண்மை.

ஆயினும் இன்றைய கால கட்டத்தில் இவ் வெற்றிகளைக் குறித்து நாம் திருப்திப்பட்டிருக்க முடியாது. உற்பத்தியாளரினதும், நாட்டினதும் அபிவிருத்தியே எமது முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும்.

ஆதலால்தான் கள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தெங்கு, பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் என பெயர் மாற்றப்பட்டமையை நாம் வரவேற்கின்றோம். இன்று உலகச் சந்தையிலே சீனியின் விலை அண்டவெளியை நோக்கி ஏறிக்கொண்டேயிருக்கின்றது. பிரித்தானியாவிலே கூட சீனியை கூப்பன் அடிப்படையில் விநியோகிப்பதற்கு திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன.

இந்நிலையில் நாம், குறிப்பாக கூட்டுறவு இயக்கம், நிதானமாகச் சிந்தித்து எமது நாட்டின் நிலையை சீர்தூக்குவதற்கு உதவ முன்வர வேண்டும்.

இப்பெயர் மாற்றத்தின் மூலம் நாம் இவ்வரலாற்றுப் பணியை உணர்ந்து விட்டோம் என்பது தெட்டத்தெளிவாகின்றது. இனிமேல் கள்ளை வெறுமனே உற்பத்திசெய்வதோடு நாம் திருப்தியடையாது கருப்பட்டி, சீனி, 'ஜீஸ்ற்' வினாரி போன்றவற்றையும் உற்பத்தி செய்து அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதோடு நாம் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களைப் பெருக்கி எமது நாட்டைக் காப்போம். அத்துடன் பயனுள்ள பொருள்களையும் நாம் தயாரித்து நன்மை பெறுவோம். இதற்கு ஏதுவாகவே இப்பெயர் மாற்றம் நடைபெற்றிருக்கின்றது.

அண்மையில் கூட்டுறவு இயக்கத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மாண்புமிகு T. B. இலங்கரத்தின உரையாற்றுகையில் கூட்டுறவு இயக்கம் உணவுப் பொருள்களையும் வேறு பொருட்களையும் விநியோகிப்பதோடு மட்டும் தங்கியிராது அபிவிருத்தியிலே கூடுதலாக ஈடுபடவேண்டுமெனக் கூறினார்.

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றை நாம் நோக்கும் போது, இன்று நிலவும் சில போக்குகள் அவ்வரலாற்றின் அடிப்படையிலே உருவாகியுள்ளமையை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இரண்டாம் உலகப் போர் மூண்ட காலத்தில நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் அவசரம் அவசரமாகத் தொடங்கப்பட்டது. அப்போது நிலவிய கஷ்ட நிலையிலே எல்லோருக்கும் சமமாக உணவு விநியோகிக்கப்பட வேண்டும் என்பதே இதன் அடிப்படை. இத்தனை ஆண்டுகள் கழிந்தும் ப. நோ. கூ. சங்கங்கள் மறுசீரமைக்கப்பட்டும் பெரும்பாலான சங்கங்கள் நுகர்ச்சியாளர் விநியோகத்திலேயே கூடுதலான அக்கறை செலுத்தி வருகின்றன. இன்றைய தேவை அபிவிருத்தியே — குறிப்பாக உணவுற்பத்திப் பெருக்கமும் கைத்தொழில் அபிவிருத்தியுமே. இவை இரண்டும் மக்களின் இரு கால்கள்.

# கூட்டுறவுச் செய்திகள்

## நெடுந்தீவில் கருத்தரங்கு

புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் நெடுந்தீவுக் கிளையின் கருத்தரங்கு அண்மையில் திரு. பூவிராசாவின் தலைமையில் நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. தலைவர் தனது உரையில் நெடுந்தீவு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்றும், புங்குடுதீவில் ஒரு மக்கள் கடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அதன் மூலம் மக்கள் தமக்கு வேண்டிய சகல தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள வசதியுண்டு என்றும் குறிப்பிட்டார்.

யாழ் கூட்டுறவுக் கல்லூரி கல்வி உதவியாளர் திரு. ஆ. மகேஸ்வரா கிளைக் குழுக்களின் கடமைகள் பற்றிய கருத்தரங்கில் கருத்துரை வழங்கினார். இக்கருத்தரங்கில் கிளைகளின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு, அவைகளைத் தீர்த்து வைக்க சங்கத்தலைவர் ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சங்க முகாமையாளர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றி கூறினார்.

## உறுப்பினரிடையே நெருங்கிய தொடர்பை வளர்க்கும்

கருத்தரங்கு பணியாளரிடையே செயல் திறனைப் பெருக்கி புத்தூக்கத்தினை அளித்து நெறியாளர் உறுப்பினர் ஆகியோரிடையே நெருங்கிய தொடர்பினை வளர்க்கும் என யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச சபையின் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் பூநகரி ப. நோ. கூ. சங்கத் தலைமைக் காரியாலயப் பணியாளருக்கான கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கு மேற்படி சங்கப் பொது முகாமையாளரின் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச சபையின் பணியாக உதவியாளர் திரு M. P. மனோகரன் பேசுகையில் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி திட்டமிடலிலும் செயற்

படுத்தலிலுமே தங்கியுள்ளது. ஒவ்வொரு ஊழியனும் திட்டமிடலில் தனது பங்கைச் செலுத்துவதுடன் அதன் செயற்பாட்டிலும் பங்குடையவனைக் காணப் படுகின்ருன். சிறந்த திட்டமிடலும் அதன் நிறைவான செயற்பாடும் ஊழியர்களுக்கு ஊக்கத்தையும் சங்கத்திற்குப் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் என்று கூறினர்.

சரக்குக் கட்டுப்பாடு ரொக்கக் கட்டுப்பாடு எங்ஙனம் செயற்படுத்த வேண்டும் என்பதை படிவங்களின் ஆதாரங்கள் கொண்டு யாழ் கூட்டுறவுக் கல்லூரி கல்வி உதவியாளர் திரு. ஆ. மகேஸ்வரா விளக்கினர்.

## போட்டியிட்டு வளர்ச்சியடையும் நிலை

புனரமைப்பிற்குப் பின் கூட்டுறவுச் சங்க நாளாந்த தொழிற்பாடு சம்பந்தமான பல்வேறு முகாமையில் அதிகாரங்கள் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனை கூட்டுறவு நிறுவனங்கள் ஏனைய நிறுவனங்களுடன் போட்டியிட்டு வளர்ச்சியடையக் கூடிய நிலை ஏற்பட்டு வருகின்றது என ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை பணியக உதவியாளர் திரு. M. P. மனோகரன் பளை ப. நோ. கூ. சங்க தலைமைக்காரியாலய கூட்டுறவு அபிவிருத்தி யோகத்தர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் கூறினர்.

மேலும் அவர் பேசுகையில் நடைமுறையில் சில முகாமைப் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து அவை அனைத்தையும் பணியாளர் சுமுகமாய்த் தீர்த்து நிலைமையை மாற்றயமைத்தல் வேண்டும். நெறியாளர் குழுவினருக்குத் திட்டங்களை நிறைவேற்றி தீர்மானங்களை எடுப்பதற்குரிய விபரங்களை பணியாளர் காலந்தோறும் வழங்கி வர வேண்டும் என்ருர்.

யாழ் கூடடுறவுக் கல்லூரி கல்வி உதவியாளர் திரு. ஆ. மகேஸ்வரா கணக்குப் பதிவியல், பொருட் கட்டுப்பாடு, ரொக்கக் கட்டுப்பாடு எவ்விதத்தில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்பதை படிவங்களின் ஆதாரத்துடன் விளக்கினர்.

# கூட்டுறவுக் கல்லூரி யாழ்ப்பாணம்

## கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறி (சாதாரண பிரிவு) 1975

1-1-1975ல் தொடங்கவிருக்கும் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறிக்கு (சாதாரண பிரிவு) கீழே குறிக்கப்பட்டுள்ள தகமைகளையுடைய கூட்டுறவுப் பணியாளர்களிடமிருந்தும் பணியாளர் அல்லாதோர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகமைகள்.

### கூட்டுறவுப் பணியாளர்

1. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் (கனிஷ்ட பிரிவு) பரீட்சையில் சித்தி எய்தியோர்.

அல்லது

2. சிரேஷ்ட கல்வித் தராதரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்த நிரந்தர பணியாளர்.

அல்லது

3. ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 5 வருட அனுபவமும் கனிஷ்ட கல்வித் தராதரப் பரீட்சையில் சித்தியெய்திய நிரந்தர பணியாளர்.

### பணியாளர் அல்லாதோர்

சிரேஷ்ட கல்வித் தராதரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியெய்திய அத்தடவையில் அல்லது அத்தடவையிலும் வேறு ஒரு தடவையிலும் எண்கணிதம் அல்லது கணக்குப் பதிவியல் அல்லது தூய கணிதம் அல்லது பிரயோக கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி அடைந்தவர்கள்.

தகமையுடைய கூட்டுறவுப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு வெற்றிடங்கள் இருந்தால் மட்டுமே பணியாளர்கள் அல்லாதோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பப்படிவங்களை பொறுப்பதிகாரி, கூட்டுறவுக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களைக் கடிதமூலம் பெற விரும்புவோர் சொந்த முகவரி எழுதி முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூட்டுறவுப் பணியாளர்களின் விண்ணப்பங்கள் அப்பகுதி கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

25-11-1974

பொறுப்பதிகாரி
கூட்டுறவுக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்

## தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத் தழுவி எழுதப்பட்டது)

407 இறாத்தல் மீன், மீன் பிடித்திணைக்களப் படகுகளினால் பிடிபட்டன. எஞ்சியவை 12 கூட்டுறவு கடற்றொழிலாளர் சங்கங்களால் வழங்கப்பட்டன. முதல் 15 மாதங்களில் சுத்த இலாபம் ரூபா 3,046,616.

பின்வரும் சங்கங்கள் பிடித்த மீனைச் சமாசம் இயங்கத் தொடங்கி முதல் ஆண்டிலே கையாண்டது:

(1) தூவ கடற்றொழிலாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

(2) தலவில மாறவில மொடறுவெல கூட்டுறவு மீன்பிடிச் சங்கம்.

(3) முன்னக்கரேசன் நிக்கலஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுக் கடன் விற்பனைச் சங்கம்.

(4) பத்திமா கடற்றொழிலாளர் கூட்டுறவு கடன் விற்பனைச் சங்கம்.

(5) உல்கிட்டியவ கடற்றொழிலாளர் கூட்டுறவு கடன் விற்பனைச் சங்கம்.

(6) கருக்கு போன் கடற்றொழிலாவர் கூட்டுறவு கடன் விற்பனைச் சங்கம்.

(7) மட்டாகொட்டுவ கடற்றொழிலாளர் கூட்டுறவு கடன் விற்பனைச் சங்கம்.

(8) கல்பிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு கடன் விற்பனைச் சங்கம்.

(9) விடத்தல்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவு கடன் விற்பனைச் சங்கம்.

(10) தங்காலை கடற்றொழிலாளர் கடன் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

(11) கலாமதிய கடற்றொழிலாளர் கூட்டுறவு கடன் விற்பனைச் சங்கம்.

(12) குடுவெல கடற்றெழிலாளர் கூட்டுறவுகடன் விற்பனைச் சங்கம்.

கடற்படையிடமிருந்து மீன் பிடித்தினைக்களம் வாடகைக்கு எடுத்திருந்த குளிர்ச்சாதன அறைகளைச் சமாசம் பயன்படுத்திற்று. ஆனால், மீனுக்குக் குளிரூட்டுவதற்கு வேண்டிய துணைச் சாதனங்கள் இங்கு இருக்கவில்லை. 60—90 தொன் மீனைத்தான் அது கொள்ளக் கூடியதாக இருந்தது. மேலும் உடன் மீனை இதில் 10 நாட்களுக்கு மட்டும் தான் பேணி வைக்கக்கூடியதாக இருந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் கனடா நாட்டு உதவியின் கீழ் இலங்கைக்கு அளிக்கப்பட்ட குளிர்சாதன அறைகள், குளிர்சாதனப் பெட்டிகள், ஐஸ் உற்பத்தி இயந்திரம் ஆகிய வசதிகளைச் சமாசம் பயன்படுத்தக் கூடியதாய் இருந்தது. நீர் கொழும்பு மாநகர சபை எல்லைக்குச் சற்று அப்பால் எற்றுக்கள என்னுமிடத்தில் மீன் பதனிடும் நிலையம் ஒன்றினைச் சமாசம் திறந்து வைத்தது. இது மிகவும் வெற்றிகரமாக இயங்கியது.

சமாசத்தின் வெற்றிக்குக் காரணம் நிருவாக சபையினதும் ஊழியர்களினதும் தொழில் நுட்ப அறிவும், அயராத சேவையுமே. உறுப்புரிமை வகித்த சங்கங்கள் வழங்கிய மீனையும், அரசாங்கப் படகுகள் மூலமும் வேறு ஆழ்கடல் சென்ற படகுகள் மூலமும் பிடிபட்ட மீனைக் கொள்வனவு செய்து விற்றதனால் இச்சமாசம் தொழிற்பட்டு வந்தது. எனினும் உறுப்புரிமை வகித்த எல்லாச் சங்கங்களும் சமாசத்தை முழுக்க முழுக்கப்பயன் படுத்தின என்று சொல்வதற்கில்லை. எடுத்துக் காட்டாக 31 ஜனவரி 1955 வரையிலான கணக்கு ஆண்டில் உறுப்பினர் சங்கங்கள் வழங்கிய 1,139,937 இறாத்தல் மீனில் தூவ கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மட்டும் 824,353 இறாத்தல் மீனை வழங்கியிருந்தது. 1955-ம் ஆண்டளவில் ஆரம்பத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்த சங்கங்களில் சில சமாசத்திற்கு மீன் வழங்குவதை நிறுத்திவிட்டன. எஞ்சியிருந்தவை தூவ, தங்காலை கலாமெற்றிய, தல்வில, மருவில, மொதருவில, குடவில ஆகிய இடங்களில்

இருந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களே. பட்டணகெள்ள, ஆமதூவ, அர்ச் செபஸ்தியன், தூவ மேற்கு, மாகல்ல, நில்வெல்ல, அம்பாந்தோட்டை ஆகிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிய உறுப்பினர்களாகச் சேர்ந்து சமாசத்திற்கு மீன் வழங்கின. இச் சங்கங்கள் எல்லாவற்றிலும் முன்னோடியான தூவ கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமே வலிமை பெற்றதாக விளங்கியது.

1964ல் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் நிறுவப்படும்வரை சமாசம் சங்கங்களுக்குச் சேவையாற்றி வந்தது. மீன்பிடிக் கூட்டுத்தாபனம் உருவாகியதும் சமாசத்தின் வியாபாரத்தை அது கையேற்றது.

1953 டிசம்பர் இறுதியில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தொகை 123 ஆக அதிகரித்தது. இவற்றில் 35 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும், 88 கடனுதவு சங்கங்களாகவும் இருந்தன. எனினும், இயங்காத அல்லது வங்குரோத்தான சங்கங்கள் கலைக்கப்பட்டதனால் 1956-ல் சங்கங்களின் தொகை 93 ஆகக் குறைந்தது.

கட்டுப்பாடான முறையில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களினூடாக மீனவர்க்கு கடன்கள் வழங்கப்பட்டன. எனினும் சங்கங்களின் வியாபாரத் துறையை நடாத்துவதில் அவர்களுக்கு மேலும் கல்வி புகட்டப்படவேண்டியிருந்தது. அத்துடன் மீனவர் மத்தியிலிருந்து தகுதியான தலைவர்கள் தோன்றவேண்டியிருந்தது. தரத்தைப் பொறுத்தமட்டில் சங்கங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. கூட்டுறவு ஆக்க ஆணையாளரால் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒரு சங்கம் மட்டுமே தகுதிவாய்ந்ததாய் இருந்தது. அச்சங்கம்பற்றி 1957-ம் ஆண்டிற்கான தனது ஆண்டறிக்கையில் ஆணையாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''தூவ கடற்றொழிலாளர் சங்கம் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியிருக்கின்றது. எல்லாச் சங்கங்களாலும் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகையில் ⅟₃ இச் சங்கத்தால் மட்டும் வழங்கப்பட்டது. அதன் உறுப்

பினர் தொகை 56 ஆக இருந்தபோதிலும் அதன் வியாபார அளவு அவ்வளவாக இருந்தது. புத்தளம், வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் சங்கம் சிதறலாக ஆறு நிலையங்களை நடாத்தி வருகின்றது. புத்தளத்திற்கு 30 மைல் தொலைவிலுள்ள காரதீவு என்னும் சிறு தீவே அதன் பிரதான மீன்படும் இடமாகும். மணற் பிரதேசங்களில் மீனைக் கொண்டு செல்வதற்கென அதனிடம் இரண்டு உழவு இயந்திரங்கள் உள. பெரிய மீன் இன வகைகள் வியாபாரிகளுக்கும், கூட்டுறவு மீன் விற்பனைச் சமாசத்திற்கும் பச்சையாக விற்கப்படுகின்றன. ஏனையவை கருவாடாக்கப்படுகின்றன. உடன் மீன் விற்பனையால் பெறப்பட்ட தொகை ரூ.826,000 கருவாட்டு விற்பனையால் பெறப்பட்ட தொகை ரூ. 494,000. மீன் விற்பனையால் மொத்தமாகப் பெறப்பட்ட தொகை ரூ. 1320,000. அவ்வாண்டில் கடற்றொழிற் சங்கங்களின் மொத்த விற்பனையில் இது 60 வீதமாகும். இச்சங்கம் ஈட்டிய சுத்த இலாபம் ரூ. 58,400. இலாபத்தில் இயங்கிய 43 சங்கங்கள் ஈட்டிய சுத்த இலாபத்தில் அரைவாசிக்கு மேற்பட்டது இத்தொகை. அதன் முற்றுகச் செலுத்தப்பட்ட பங்கு முதல் ரூ 2,652. அதன் ஒதுக்கீடுகள் ரூ. 898,825. இச் சங்கங்களின் மொத்த ஒதுக்கீடுகளில் இத்தொகை 5' வீதமாகும். இப்புள்ளி விபரங்களிலிருந்து ஏனைய சங்கங்கள் எவ்வளவு பலவீனமுற்றிருக்கின்றன என்பது புலப்படும்.

அவ்வாண்டிலே எல்லாமாக 100 சங்கங்கள் இருந்தன. உறுப்பினர் தொகை 3914. சங்கங்களின் அமைவு பின்வருமாறு.

| | |
|---|---|
| கிழக்கு மாகாணம் | 29 |
| வட ,, | 24 |
| தென் ,, | 21 |
| வடமேல் ,, | 15 |
| மேல் ,, | 11 |

(வளரும்)

# தண்டிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர்கள்

ஜனவரி தொடக்கம் ஜூன் 1974 வரை விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதற்கும், வேறு குற்றங்களுக்ாகவும் தண்டிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர்களின் பெயர்ப்பட்டியல்:

| திகதி | மாவட்டம் | சங்கத்தின் பெயர் | குற்றவாளியின் பெயர் | குற்றம் | தண்டனை |
|---|---|---|---|---|---|
| 11-3-74 | வவுனியா | முகாமையாளர் மாமடுவ கிளை | கே. பி. அப்புகாமி | மன்றிலின் விலையை விளம்பரப் படுத்தாமை | ரூ. 20 |
| ,, | ,, | முகாமை. தல்லிக் குளம் கிளை | S.K.A. பிள்ளை | கோதுமை மாவின் விலையை விளம்பரப்படுத் தாமை | ரூ. 20 |
| ,, | ,, | முகாமை. GSTD இ. 14 கிளை நிலையம் | M.புஷ்ப நாதன் | பயிற்சிப் புத்தகங்களின் விலையை விளம்பரப் படுத்தாமை | ரூ. 20 |
| 18-1-74 | பதுளை | ரண்புக் பொத்த கி. | D.M. ஜெ சேகரா | பாணைக் கட்டுப்பாட்டு விலைக்கு கூடுதலாக விற்றமை | ரூ. 50 |
| 16-1-74 | காலி | மகாவத்த கிளை வட்டபொல | P.G.பந்து சேன | மல்லியைக் கட்டுப்பாட்டுவிலைக்குக் கூடுதலாக விற்பனை செய்தமை | ரூ. 175 |
| 7-2-74 | காலி | மாதும் பொற B கிளை யக்கல முல்ல | ஏ. சூரிய ஆராய்ச்சி | சிலேற்பெண்சில்களை கட்டுப்பாட்டு விலைக்குக் கூடுதலாக் விற்பனை செய்தமை | ரூ 25ம் இடைநிறுத்தப்பட் 4 வார சிறைத் தண்டனை |

| திகதி | மாவட்டம் | சங்கத்தின் பெயர் | குற்றவாளி யின் பெயர் | குற்றம் | தண்டனை |
|---|---|---|---|---|---|
| 27-5-74 | கொழும். | மாநகர ச. கி நி இ. 8 கொட்டாஞ் சேனை | A. பீற் றர் | நிறை குறை வாக அரிசி யை விற்பனை செய்தமை | ரூ. 25 அரசு தரப்புச் செலவு |
| 7-4-74 | வவுனியா | முகாமை. தலைக்கன் பிட்டி கி. நி. | P. எட் வர்ட் | மன்ரில்களை கட்டுப்பாட் டுவிலைக்குக் கூடுதலாக விற்பனை செய்தமை | ரூ 35 அரசு தரப்புச் செலவு |
| 13-5-74 | வவுனியா | ஓடிவெட்டிக் கிளை | S.சுப்பிர மணியம் | லக்ஸ்பிரே யின் விலையை விளம்பரப் படுத்தாமை | ரூ. 25 |
| 31-5-74 | வவுனியா | முகாமை. கனகராயன் குளம் கிளை | N.வெங்க டாசலம் | ,, | ரூ. 25 அரசு தரப்புச் செலவு |
| ,, | வவுனியா | முகாமை. சிவபன்குளம் | K.குமா ரசாமி | மன்ரீலின் விலையை விளம்பரப் படுத்தாமை | ரூ. 25 அரசு தரப்புச் செலவு |
| 24.5-74 | அம்பாந் தோட் டை | தங்காலை தெற்கு கிளை | G.V. பெட் றிக்கும் X.B விஜித்தும் | நிறைகுறை வாக அரிசி விற்பனை செய்தமை | ரூ 25 அரசு தரப்புச் செலவு |
| 16-1-74 | திருக்கோ ணமலை | யா. மா. ந. ப. நோ. கூ. சங் லொறி | V கோ ணேஸ்வர னும் சமர வீராவும் | 28 மூடை மாவை களவாகக் கொண்டு சென்றமை | மா பறி முதல் |
| 22-1-74 | யாழ்ப் பாணம் | முகாமை. நெடுந்தீவு மத்திய கிளை | S யோ சேப் | கட்டுப்பாட் டுவிலைக்குக் கூடுதலாக லக்ஸ்பிறே யை விற்பனை செய்தமை | ரூ. 50 அரசு தரப்புச் செலவு |

| திகதி | மாவட்டம் | சங்கத்தின் பெயர் | குற்றவாளியின் பெயர் | குற்றம் | தண்டனை |
|---|---|---|---|---|---|
| 29-1-74 | யாழ்ப்பாணம் | முகாமை. ஐயாவளி பேக்கரி | M. சுப்பிரமணியம் | கட்டுப்பாட்டு விலைக்குக் கூடுதலாகப் பாணை விற்பனை செய்தமை | ரூ 400 அரசு தரப்புச் செலவு |
| 18-4-74 | ,, | கி. நி இ. 22 மாவடி | வி. சண்முகநாதன் | விட்டக்ஸ் மான்றில்களை கட்டுப்பாட்டு விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்தமை | 1 மாத சிறைத் தண்டனை |
| 19-6-74 | அம்பாந்தோட், | அம்பாந்தோட். கிளை | ஏ. ஜெயசேகராவும் K. குணபாலாவும் | 1 பெட்டி சிலேற் பென்சில்களை கட்டுப்பாட்டு விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்தமை | ரூ. 25 அரசு தரப்புச் செலவு |
| 18-6-74 | புத்தளம் | இ. 1 A. கிளை ஆணமடுவ | D.M. கப்புறுபண்டா | 1 பெட்டி சிலே. பென்சில் கட்டுப்பாட்டு விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்தமை | ரூ.500 1 மாதச் சிறைத் தண்டனை 5 வருடம் பிணை |

## தபால் மூலமமைந்த பயிற்சி நெறி

# கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம்

## கனிஷ்ட பிரிவு

பல்வேறு கூட்டுறவுக் கல்வி நிலையங்களில் நடாத்தப்பட்டு வந்த கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர (கனிஷ்ட பிரிவு) பயிற்சி நெறிக்குப் பதிலாக தபால் மூலமமைந்த பயிற்சிநெறி 1973-ம் ஆண்டிலிருந்து இடம்பெற்று வருகின்றது. இதன் அடுத்த பயிற்சி 1975-ம் ஆண்டு தை மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இப்பயிற்சி நெறி சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடாத்தப்படும்.

தகமை : கூட்டுறவுச் சங்கமொன்றின் பணியாளர் எவரேனும் இப்பயிற்சியைப் பயிலலாம்.

பதிவு செய்தல் : இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் 1974-ம் ஆண்டு மார்கழிமாதம் 25 ம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் 12, 14 காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவு செய்வதற்கான கட்டணம் : பயிற்சி நெறிக்குரிய கட்டணம் ரூபா 5/- ஆகும். பாடங்கள் : கனிஷ்ட தராதரப் பயிற்சி நெறி 3 பாடங்களைக் கொண்டது, அவையாவன : கூட்டுறவு, கணக்குப் பதிவியல், விற்பனையியல். பயிற்சி நெறிக்குப் பதிவு செய்துள்ள பரீட்சார்த்தி விரும்புவாராயின் தடவை ஒன்றுக்கு ஒரு பாடமாக எடுக்கலாம்.

பயிற்சி நெறிக்குரிய கட்டணங்கள் :

| | | |
|---|---|---|
| கூட்டுறவு | ரூபா | 20/- |
| விற்பனையியல் | ரூபா | 20/- |
| கணக்குப் பதிவியல் | ரூபா | 30/- |

விண்ணப்பங்கள் : இப்பயிற்சி நெறிக்குப் பதிவு செய்வதற்காக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும். இத்தகைய படிவங்களைப் பெறுக் கொள்வதற்கு, முத்திரையொட்டி முகவரியிடப்பட்ட தபாலுறைகளை பொறுப்பதிகாரி, தபால் மூலமமைந்த பயிற்சிநெறித் தொகுதி, ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை, 12, 14, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது சபையின் அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்கப்படல் வேண்டும். சகல விண்ணப்பங்களும், விண்ணப்பதாரி சேவையாற்றுகின்ற கூட்டுறவுச் சங்கத்தினூடாக அனுப்பப்படுவதுடன் பதிவு செய்வதற்காய கட்டணத்தையும் (ரூபா 5/-) பயிலவுள்ள பாடத்திற்கு அல்லது பாடங்களுக்குரிய கட்டணங்களையும் கொண்டதாயிருத்தல் வேண்டும். செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை சபையின் அலுவலகத்திற்கு நேரிலேயே சென்று செலுத்தலாம். அல்லது ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை கொழும்பு என்ற முகவரிக்கு பிறப்பிக்கப்பட்டதான காசுக்கட்டளை அல்லது அஞ்சல் கட்டளை மூலம் செலுத்தலாம்.

பரீட்சை : பொல்கொல்லையிலுள்ள கூட்டுறவுப் பாடசாலையே இப்பரீட்சையை நடாத்தி சான்றிதழையும் வழங்கும் ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதத்திலும், டிசம்பர் மாதத்திலும் பரீட்சைகள் நடாத்தப்படும். தபால மூலம் படித்துள்ள பாடத்தின் அல்லது பாடங்களை மாத்திரமே இப்பரீட்சையின்போது பரீட்சார்த்திகள் எடுக்கலாம். பரீட்சார்த்தி சித்தியெய்துகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும். மூன்று பாடங்களிலும் சித்தியெய்துபவர்களுக்கு மாத்திரமே கூட்டுறவுப் பணியாவர் கனிஷ்ட தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

இப்பயிர்சி நெறிக்குப் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே இப்பயிற்சிநெறி பற்றிய விபரங்களை அடங்கிய விபர பஞ்சரி தபாலை அனுப்பிவைக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு பொறுப்பதிகாரி, தபால்மூலமமைந்த பயிற்சி நெறித்தொகுதி ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை 12, 14 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

பொறுப்பதிகாரி,
தபால் மூலமமைந்த பயிற்சி நெறித்தொகுதி
ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அவற்றினை உருவாக்கிச் செயற்படுத்துவதற்கான வழிகாட்டுக் குறிப்புகள்

## 1. நோக்கம்

அபிவிருத்தி நிருவாகத் துறைக்கும் மக்களுக்குமிடையே மாவட்ட அபிவிருத்திச்சபை அடிப்படையான இணைப்பாகும். உற்பத்தியையும், அபிவிருத்தியையும் உள்ளடக்கிய ஆக்கபூர்வமான பணியில் உள்ளூர் சமூகத்தை இச்சபை ஈடுபடுத்துகின்றது.

## 2. கடமைகள்

பின்வருவன சபையின் கடமைகளாகும் :

(அ) ஒரு பகுதிக்கென முழு நிறைவான அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல்.

(ஆ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தைச் செயற்படுத்துவதில் மக்கள் முயற்சிகளையும், அரசாங்க சேவைகளையும் இணைத்தல்.

(இ) அப்பகுதியிலே அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி அறிந்து வைத்திருப்பதோடு, அவற்றின் வளர்ச்சி குறித்து ஆய்ந்து ஏதேனும் துண்டு விழுதல்கள் ஏற்படின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு அவற்றினைக் கொண்டுவந்து திருத்த நடவடிக்கைகளைத் தகவுரை செய்தல்.

சபையின் பணி ஆலோசனைப் பாங்கானதே. திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பு அவ்வவற்றிற்குரிய உத்தியோகத்தர்களைச் சார்ந்ததே.

## 3. நடைமுறை

பின்வருவனவற்றை நச்சபை ஆற்றும் :

(அ) உள்ளூராட்சி மன்றப் பகுதியின் பொருளாதார அமைப்பைப்பற்றிய பூர்வாங்க ஆராய்வினை நடாத்துதல். குறிப்பாக ஆக்க,விளைவளவு மக்கள் தொகை, அப்பகுதியிலே

கிடைக்கப் பெறும் மூல வளங்களும், திறமைகளும், வேலைவாய்ப்புகள், குடும்ப வருவாய் ஆகியவை குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) அப்பகுதியிலுள்ள மூல வளங்கள், சொத்துக்கள், வசதிகள் பற்றிய (குறிப்பாக உற்பத்தித்துறைகள் பற்றிய) விபரப் பட்டியலைத் தயாரித்தல்.

(இ) பின் வருவனவற்றின் அபிவிருத்தி வாய்ப்பு வளங்களை இனங்காணுதல் ·

1. விவசாயம், 2. சிறு கைத்தொழில்களும, கைப்பணிகளும். 3. விவசாயத்துறைக்குத் தேவையான வீதிகள், சந்தைப் படுத்துதல் வசதிகள், வீடமைப்பு போன்ற அடித்தள அமைப்புத் தேவைகள்.

(ஈ) அபிவிருத்தி செயல் முறைத் திட்டங்களைத் தயாரித்தல். இவ்வாறு செய்யும்போது இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய மூலதனம், திட்டம் செயற்படத் தொடங்கியதும் ஏற்படும் உற்பத்திச் செலவுகள், சந்தை வாய்ப்புகள், சந்தைப்படுத்துதல் அமைப்பு, உற்பத்தியாளர் பெறக்கூடிய சுத்த வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் திட்டத்தின் தொழில் நுட்ப பொருளாதார சாத்தியப்பாட்டைச் சபை ஆராய்தல் வேண்டும் (இது குறித்து மேலும் தகவல்கள் பெறுவதற்கு பகுதி 6ஐ நோக்கவும்.)

4. சபைக் கூட்டங்கள்

(i) தனது பணிகளை ஆற்றும் பொருட்டு சபை குறைந்தது மாதம் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும். தேவை ஏற்படின் அத்தேவைகளுக்கு ஏற்ப அடிக்கடி கூடலாம்.

(ii) மொத்த உறுப்பினர் தொகை அதிகமாக இருக்குமிடத்து செயற் குழு ஒன்றை நியமிக்கவேண்டி ஏற்படும். இக்குழுவில் 10 உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர் இடம் பெறுவர். அவர்களில் குறைந்தது மூவராவது பின்வரும் துறைகள் ஒவ்வொன்றுக்கும் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். விவசாயம், கைத்தொழில், கிராமப்புற அடித்தள அமைப்பு. இவ்வுத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் அவ்வத்துறை நடவடிக்கை

களோடு நன்கு பரிச்சய முடையவர்களாக இருத்தல் வேண்டும். மேலும், அவர்கள் சபையின் பணிகளுக்கென மேலதிக நேரத்தை தன்விருப்பார்ந்த முறையில் செலவழிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) சபையின் உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர் யாவரும் செயற்குழு உறுப்பினராய் கடமையாற்றுவர்.

(iv) ஒவ்வொரு துறை குறித்தும் தகவல்களைச் சேகரித்து திட்டங்களை வகுப்பதற்கு ஓர் உபகுழு உருவாக்கப்படல் வேண்டும்.

(v) சபையின் கூட்டங்கள் மையமான இடமொன்றில் குறிப்பாக கிராம சபை அலுவலகத்தில் நடைபெறும்.

(vi) சாதாரணமாக கூட்டங்கள் கண்டிப்பான முறையில் நடாத்தப் படாவிட்டாலும் செயல் ஒழுங்கான முறையில் நடாத்தப்படல் வேண்டும்.

(vii) கலந்துரையாடப்பட்ட விடயங்கள் யாவும் கூட்டக் குறிப்புகளில் சுருக்கமான முறையில் பதியப்படுவதுடன், எடுக்கப்பட்ட முடிவும் மிகத் தெளிவாக பதியப்பட்டிருத்தல் வேண்டும். கூட்டக் குறிப்புகள் அடுத்துவரும் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற தேவை இல்லை. எனினும், கூட்ட ஆரம்பத்தில் முன்னைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும், அவை குறித்து எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைகளும் ஆராயப்பட வேண்டும்.

(viii) ஒவ்வொரு கூட்ட முடிவிலும் அடுத்த கூட்டம் நடாத்தப்படவிருக்கும் நேரமும், திகதியும் தீர்மானிக்கப்படும். கூட்டங்கள் குறித்து கடிதப் போக்குவரத்து இயன்றளவு குறைக்கப்பட வேண்டும்.

5. பதவி வகிப்போர்

(i) காரியாதிகாரி சபையின் பதவிவழி தவிசாளராய் இருப்பர். அவர் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து கூட்டக் குறிப்புக்களைப் பதிவு செய்விப்பதோடு, வெளி நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தி பொதுவாக சபையை வழிநடாத்துவார்.

(ii) உள்ளூராட்சி மன்றத் தலைவர் சபையின் உப தவிசாளராய் இருப்பர்.

(iii) ஒவ்வொரு சபை எல்லைக்கும் காலப்போக்கில் ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்படுவர். தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு காரியாதிகாரிக்கு அவர் உதவியாய் இருப்பர்.

6. செயற்படு திட்டங்களை வகுத்தல்

(i) பொது

இவ்வழிகாட்டிக் குறிப்புகள் செயற்படு திட்டங்களை மாவட்ட அபிவிருத்திச் சபைகள் முறையாக வகுப்பதை எளிமையாக்கும் நோக்கம் கொண்டவை. கைத்தொழில் திட்டங்களை வகுக்கும்போது மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளை அவை வர்ணிக்கின்றன. பொருத்தமான மாற்றங்களுடன் இவற்றினைக் கையாண்டு விவசாயத் திட்டங்களையும், அடித்தள அமைப்புத் திட்டங்களையும் வகுக்கலாம்.

செயற்படு திட்டம் வகுத்தல் மூன்று வேறு கட்டங்களாக மேற்கொள்ளப்படவேண்டும்.

1. பூர்வாங்க ஆய்வு.
2. சாத்தியப்பாடு ஆய்வு.
3. திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் பற்றிய அறிக்கை,

(ii) பூர்வாங்க ஆய்வு

தனது பகுதியிலேயுள்ள வளங்களை நேரடியாக அறிந்த சபை உறுப்பினர் ஒருவர் அவ்வடித்தளத்திலிருந்து வெளியிடும் கருத்துருவம் ஒன்றிலிருந்து தான் சாதாரணமாக செயற்படு திட்டமொன்று உருவெடுக்கும். அப்பகுதியிலே கிடைக்கக்கூடிய மூலவளங்களை இலகுவாக ஆராய்வதன்மூலம் இக்கருத்துருவத்தைப் படிப்படியாக விரிக்கலாம். நடைமுறை என்ற பகுதியிலே (3) குறிக்கப்பட்டபூர்வாங்க ஆய்வு இந்நோக்கத்தை எய்துவதற்கு உதவலாம். கிடைக்கக்கூடிய மூலப் பொருள்கள் தொழில் நுட்பத் திறமைகள், நிலம், சந்தைப்படுத்துதல் வசதிகள் போன்றவற்றை மேலும் ஆராய்வதன் மூலம் இக்கருத்துருவத்தைச் செயற்படுத்துவது அடிப்படையில் சாத்தியமா என்பது புலப்படும்.

(iii) சாத்தியப்பாடு ஆய்வு:

ஒரு செயற்படுதிட்ட கருத்துருவம் மேலும் ஆய்வுக்குரியதென சபை திருப்திப்பட்டால் சாத்தியப்பாடு ஆய்வொன்றினை மேற்கொள்வது அவசியமாகும். தொழில் நுட்ப ரீதியாக சாத்தியமா என்பதுடன் வணிக அடிப்படையில் ஆதாயம் தரவல்லதா என்பதும் ஆராயப்படவேண்டும். இதற்கு அப்பகுதியிலுள்ள விடயமறிந்தவர்களுடைய ஆலோசனையைப் பெறுவதுடன் சம்பந்தப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களின் ஆலோசனையையும் குழு பெறல் வேண்டும்.

பொதுவாக சாத்தியப்பாடு ஆய்வு பின்வரும் தலைப்புகளில் நடாத்தப்படலாம்.

(i) சந்தை ஆய்வு (இப்பொருளுக்கு இப்பகுதியில் தேவை நிலவுகின்றதா? சந்தைப்படுத்துதல் ஒழுங்குகள் வெளியிடங்களில் செய்யப்படல் வேண்டுமா?)

(ii) தொழில் நுட்ப ஆய்வு (செயற்படு திட்டத்தின் அளவு, கையாளப்படவிருக்கும் உற்பத்தி முறை, மூலதனத் தேவைகளினதும், தொழிற்படு செலவினங்களினதும் மதிப்பீடு)

(iii) கிடைக்கக்கூடிய மூலவள ஆய்வு (போதிய மூலப்பொருள்கள், நீர், தொழிலாளர் உண்டா)

தேவைப்படும் நிதியை நுட்பமாக மதிப்பிடுவதற்கு இவ்வாய்வுகள் உதவும்.

இக்கட்டத்தில் அரசாங்கத்திடமிருந்தும், கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும், இத்திட்டத்தால் பங்குபற்றுவோரிடமிருந்தும் பெறவேண்டிய நிதிகளை ஆராய்வது பொருத்தமாக இருக்கும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனமாக ஆராய்வதன் மூலம் செம்மையான செயற்படுதிட்டங்களை வகுக்கலாம். ஆரம்பத்தில் அரசாங்கத்திடமிருந்து உதவிபெறும் இச்செயற்படு திட்டங்கள் காலப்போக்கில் சுதந்திரமான, தமக்குத்தாமே வேண்டிய நிதியை வழங்கும் நிலையங்களாக இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(iv) செயற்படு திட்ட அறிக்கை

ஒரு திட்டம் அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டு

மென சபை திருப்திப்பட்டால் மேலும் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதுடன் சுருக்கமான செயற்படு திட்ட அறிக்கையொன்றும் தயாரிக்கப்படல் வேண்டும்.

ஆய்வுகள் மூன்று வேறு கட்டங்களாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) தெரிவு செய்யப்பட்ட இடத்தில் ஏற்புடமை வீதி வசதிகள் மூலப் பொருள்கள் பெறப்படும் இடங்களுக்கும், சந்தைகளுக்கும் அண்மித்திருத்தல் போன்ற விபரங்கள் ஆராயப்பட வேண்டும். விவசாயத் திட்டங்களைப் பொறுத்தவரை மண்ணினதும், நிலத்தினதும் ஏற்புடமை, நீர்வளம், வடிகால் வசதிகள் போன்றவை ஆராயப்பட வேண்டும்.

(ii) கட்டிடத் திட்டங்களையும், கட்டிட வேலைகளுக்கான மதிப்பீடுகளையும், விபரங்களையும் தயாரித்தல்.

### (iii) கட்டிட வேலைகளுக்கான நேர சூசி

திட்டத்தை வேறு வழிகளில் செயற்படுத்த முடியுமா என்பதையும் ஆராய்வது மிக முக்கியம்.

## 7. செயற்படு திட்ட முகாமை

(i) சபை தயாரிக்கும் அபிவிருத்தித் திட்டங்களில் சில அரசாங்கத்திணைக்களங்களினால் நிருவகிக்கப்பட வேண்டியவையாக இருக்கலாம். சில கடன் அல்லது மானியம் பெறும் திட்டங்களாக இருக்கலாம். இவற்றின் முகாமை இவ்வபிவிருத்தித் திட்டத்திற்குப் பொறுப்பாக உள்ள ஓர் உத்தியோகத்தரைச் சார்ந்ததாய் இருக்கும். இவர் மேற்பார்வைக்குப் பொறுப்பாக இருப்பதோடு கூட்டுறவு முயற்சிகளை ஊக்குவிப்பதோடு சந்தைப்படுத்துதலில் தடைகளையும் அகற்ற உதவுவார்.

தொழில் நுட்ப ரீதியாகவும் செயற்படு திட்டம் சாத்தியமானது என சபை திருப்திப்பட்டால் திட்டத்தை நிருவகிக்க வினைத்திறம் வாய்ந்த அமைப்பை ஏற்படுத்துவது அவசியம்.

(ii) சபையிலுள்ள பதவிவழி உறுப்பினர்களில் பொருத்தமானவர் (விவசாயத் திட்டமாக இருந்தால், விவசாயப் போதனாசிரியர்) செயற்படு திட்ட உத்தியோகத்தராக நியமிக்கப்படுவார். செயற்படு திட்டத்தைத் தொடக்கி ஒரு பொருத்தமான முகாமை அமைப்பு

கையேற்கும்வரை அதனை வழிநடாத்துவதற்கு அவரே பொறுப்பாக இருப்பார்.

(iii) ஒரு செயற்படு திட்டத்தை நிருவகிப்பதற்கு ஒரு கூட்டுறவுச் சங்கமே மிகப் பொருத்தமான நிறுவனமாகும். ஏனெனில், அது அரசாங்கத்தினலும், கடன் வழங்கும் நிறுவனங்களாலும் அங்கீகாரம்பெற்ற, சட்டப்படி அமைக்கப்பட்ட நிறுவனமாக இருப்பதனுல். மறுசீரமைக்கப்பட்ட ஆரம்ப கூட்டுறவுச் சங்கம் இத்தகைய ஒரு திட்டத்தை மேற்கொள்ளலாம். அவ்வாறு செய்ய முடியாதவிடத்து விசேட கூட்டுறவுச் சங்கங்கள் இதற்கென நிறுவப்படலாம். எடுத்துக்காட்டாக பால் உற்பத்திக்கென ஒரு பாற்பண்ணைச் சங்கம் அல்லது தச்சுத் தொழிலுக்கென ஒரு தச்சுத் தொழில் கூட்டுறவுச் சங்கம். தனிப்பட்ட பலர் ஈடுபடும் திட்டங்களில் (எடுத்துக்காட்டாக கனிவகைகளை உற்பத்தி செய்யும் திட்டங்கள்) சந்தைப்படுத்துதல் உள்ளிடுதல்களை வழங்குதல் போன்றவற்றைக் கவனிப்பதற்கு ஒரு கூட்டுறவு நிறுவனம் தேவைப்படும்.

(iv) அவ்வப்பகுதி கூட்டுறவுப் பரிசோதகரே இத்தகைய நிறுவனத்தை உருவாக்குவதற்கும் வேண்டிய உத்தியோகபூர்வமான அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் பொறுப்பாக இருப்பார்.

8. நிதி

(i) ஒவ்வொரு செயற்படு திட்டமும் வியாபார முயற்சியாகக் கணிக்கப்பட வேண்டும். அதன் முதலீடு செய்யப்படும் நிதிகள் உற்பத்தியைப் பெருக்கி வேலை வாய்ப்புக்களை வழங்குவதோடு போதிய வரவை அல்லது ஆதாயத்தை ஈட்ட வேண்டும்.

(ii) சாதாரணமாக இத்திட்டங்களில் முதலீடு செய்யப்படும் நிதிகள் பின்வருவனவற்றிலிருந்து பெறப்படும்.

(அ) உறுப்பினர்களின் பங்களிப்பு, (ஆ) உள்ளூர் கூட்டுறவுச் சங்கத்திடம் கிடைக்கக் கூடிய மூலதனம், (இ) கிராமிய வங்கியிடமிருந்து கடன் பெறுதல். (ஈ) அரசாங்கம்.

(iii) உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்படும் பங்குகள் ஈடுபடுபவர்களிடம் சமமாகப் பங்கிடப்படல் வேண்டும். உறுப்பினர்களாகச் சேரக் கூடியவர்கள் எல்லோரும்

ஈடுபடக்கூடிய வகையில் ஒவ்வொரு பங்கினது பெறுமதியும் வரையறுக்கப்படல் வேண்டும்.

(iv) முதலீடு செய்யக்கூடிய தளங்களை உள்ளூர் ஆரம்பச் சங்கம் செயற்படு திட்டத்தில் பயன்படுத்தலாம்.

(v) சபையின் ஆதரவில் தொடங்கக் கூடிய முயற்சிகளை பெரும்பாலானவற்றை உள்ளடக்கக்கூடிய கடன் திட்டங்களை உள்ளூர் கிராமிய வங்கி செயற்படுத்தலாம். மாவட்ட அபிவிருத்திச்சபை பகுதி ஒவ்வொன்றிலும் ஒரு வங்கியே உருவாக்கக்கூடிய வகையில் கிராமிய வங்கித்திட்டம் விரைவில் விரிவாக்கப்படும்.

(vi) செம்மையான அடிப்படையில் செயற்படு திட்டங்களை நிறைவுவதற்கு சபைக்கு உதவும் பொருட்டு அரசாங்கம் நிதிகளை வழங்கியிருக்கின்றது. திட்டங்களை அங்கீகரிக்கும்போது அரசாங்க அதிபர் ஒவ்வொரு திட்டத்திற்கும் வழங்கப்படக் கூடிய உதவியின் அளவைக் குறித்தல் வேண்டும். இவ்வுதவி முதலீடு செய்யப்பட்ட நிதியாகக் கணிக்கப்படுவது மிகவும் முக்கியம்.

(6-1) அரசாங்க உதவி பின்வரும் வகைகளில் வழங்கப்படும் :

(அ) குறிப்பிட்ட பணக்கொடுப்புகள்.

(ஆ) மானியங்கள்.

(இ) கடன்கள்

(ஈ) வெளி நிறுவனங்கள் ஊடாகப் பெறப்படும் உதவிகள்.

(6-2) ஆரம்ப முதலீடு திட்டத்தில் ஈடுபடுவோர்களால் சுமக்க முடியாததாய் இருந்தால் சிலவற்றிற்கான செலவுகள் அரசாங்க நிதிகளிலிருந்து பெறமுடியும். எடுத்துக்காட்டாக. (1) கிராம மட்டத்தில் தானிய, உரக் களஞ்சியங்களைக் கட்டுதல், (2) வேலைத்தலங்களையும் தொழிற்சாலைகளையும் கட்டுதல், (3) பாலங்களையும் மதகுகளையும் கட்டுதல், (4) காணியைப் பெறுதல், (5) இயந்திரங்களையும், சாதனங்களையும் கொள்வனவு செய்தல்.

(6-3) முதலீட்டிற்கு வேண்டிய நிதியில் ஒரு பகுதி சங்கத்திடமோ, தனிப்பட்ட உறுப்பினரிடமோ இருக்கப் பெறின் மானியங்கள் வழங்கப்படலாம். முதலீட்டுச் செலவுகளில் ஒரு பகுதியை இவற்றின் மூலம் பெறலாம். எடுத்துக் காட்டாக விவசாயத் திட்டங்களாயின் வேலியடைத்தல், உரம் கொள்வனவு செய்

தல், கைத்தொழில் திட்டங்களாயின் கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்தல்.

(6-4) கிராமிய வங்கிகள் போன்றவற்றிலிருந்து கடன் வசதிகள் பெறமுடியாதிருப்பின் அரசாங்கநிதிகளைப் பயன்படுத்தி கடன் வசதிகளை வழங்கலாம். இவ்வாறு செய்யும்போது பிணையாக வழங்கப்படும் தொகை எவ்வாறு கடன்கள் அறவிடப்பட வேண்டும் என்பவற்றைக் குறித்துப் போதிய பாதுகாப்புகள் எடுக்கப்படல் வேண்டும். இத்தகைய கடன் திட்டங்களைத் தொடங்கு முன்பு திட்டமிடல், வேலை வாய்ப்பு அமைச்சின் முன் கூட்டிய அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

(6-5) உலக உணவுத் திட்டம் போன்ற வெளி நிறுவனங்களினூடாகவும் உதவி வழங்கப்படலாம். இத்தகைய உதவி வழக்கமாகப்பொருளாகவே வழங்கப்படுகின்றது. வேறு உதவிகளை நிறைவாக்குவதற்கு இதனைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக உலக, உணவுத்திட்ட உதவியைப் பயன்படுத்தி ஒரு திட்டம் திருப்திகரமான உற்பத்தி மட்டத்தை அடையும் வரை அதில் ஈடுபட்டுள்ளவர்களின் கூலியை நிறைவாக்குவதற்குக் கையாளலாம்.

வெளியீடு: திட்டமிடல் வேலை வாய்ப்பு அமைச்சு.

* * *

# கடனுதவு சங்கங்களுக்கு உச்ச நிறுவனம்

கூட்டுறவு கடனுதவு சங்கங்களுக்கு உச்ச நிறுவனங்களை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கூட்டுறவு ஆக்க ஆணையாளரைக் கோருவதென ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் நெறியாளர் குழு தீர்மானித்திருக்கின்றது.

# தபால் மூலமமைந்த பயிற்சி நெறி
# கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம்
# சாதாரண பிரிவு

பல்வேறு கூட்டுறவுக் கல்வி நிலையங்களினால் நடாத்தப்பட்டு வந்த கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (சாதாரண பிரிவு) பயிற்சி நெறியுடன் தபால்மூலமமைந்த பயிற்சி நெறி 1974-ம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றது. ஆரம்பத்தில் இப்பயிற்சி கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு மாத்திரமே நடாத்தப்படவிருக்கின்றது. இதன் இரண்டாவது பயிற்சி 1975-ம் ஆண்டு தைமாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இப்பயிற்சி நெறி சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடாத்தப்படும்.

தகமைகள்: கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர (கனிஷ்ட பிரிவில்) சித்தியெய்திய கூட்டுறவுப் பணியாளர்கள்.

அல்லது

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண பிரிவு) அல்லது சிரேஷ்ட தராதரப்பத்திர (சாதாரண பிரிவில்) 6 பாடங்களில் சித்தியெய்திய கூட்டுறவுப் பணியாளர்கள்.

அல்லது

கனிஷ்ட தராதரப் பத்திரத்தில் (எட்டாம் வகுப்பு) சித்தியெய்தி கூட்டுறவுச் சங்கங்களில் 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றி வருபவர்கள் இப்பயிற்சி நெறியினைப் பயிலலாம்.

பதிவு செய்தல்: இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் 1974-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ந் திகதிக்கு முன்னர் 12, 14 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையில் தம்மைப் பதிவு செய்தல் வேண்டும்.

பதிவு செய்வதற்கான கட்டணம்: பயிற்சி நெறிக்குரிய கட்டணம் ரூபா10/- ஆகும்.

பாடங்கள்: சாதாரண பயிற்சிநெறி 5 பாடங்களைக் கொண்டது. அவையாவன: கூட்டுறவு, கூட்டுறவுச் சட்டம், கணக்குப்பதிவியல், முகாமையியல், விற்பனையியல் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (கனிஷ்ட பிரிவு) சித்தியெய்தியவர்கள் விற்பனையியல் பாடத்திலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களாவர். பயிற்சி நெறிக்குப் பதிவு செய்துள்ள பரீட்சார்த்தி விரும்புவாராயின் தடவை ஒன்றுக்கு ஒரு பாடமாக எடுக்கலாம்.

பயிற்சி நெறிக்கான கட்டணங்கள்:

| | | |
|---|---|---|
| கூட்டுறவு | ரூபா | 25/- |
| கூட்டுறவுச் சட்டம் | ரூபா | 25/- |

| | | |
|---|---|---|
| கணக்குப் பதிவியல் | ரூபா | 40/- |
| முகாமையியல் | ரூபா | 25/- |
| விற்பனையியல் | ரூபா | 10/- |

விண்ணப்பங்கள் : இப்பயிற்சி நெறிக்குப் பதிவு செய்வதற்காக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும். இத்தகைய படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு, முத்திரையொட்டி முகவரி எழுதப்பட்ட தபால் உறைகளை, 'பொறுப்பதிகாரி, தபால் மூலமமைந்த பயிற்சி நெறித் தொகுதி, ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபை 12, 14 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது சபையின் அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்கப்படல் வேண்டும். சகல விண்ணப்பங்களும், விண்ணப்பதாரி சேவையாற்றுகின்ற கூட்டுறவுச் சங்கத்தினூடாக அனுப்பப்படுவதுடன், பதிவு செய்தற்காய கட்டணத்தையும் (ரூபா 10/-) பயிலவுள்ள பாடத்திற்கு அல்லது பாடங்களுக்குரிய கட்டணங்களையும் கொண்டதாயிருத்தல் வேண்டும். செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை சபையின் அலுவலகத்திற்கு நேரிலேயே சென்று செலுத்தலாம். அல்லது ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை கொழும்பு என்ற முகவரிகளுக்கு பிறப்பிக்கப்பட்டதான காசுக்கட்டளை அல்லது அஞ்சல்கட்டளை மூலம் செலுத்தலாம்.

பரீட்சை :- பொல்கொல்லையிலுள்ள கூட்டுறவுப் பாடசாலையே இப்பரீட்சையை நடாத்தி சான்றிதழையும் வழங்கும் ஒவ்வொரு வருடமும் பயிற்சி முடிவில் பரீட்சை நடாத்தப்படும். தபால் மூலம் படித்துள்ள பாடத்தினை அல்லது பாடங்களை மாத்திரமே இப்பரீட்சையின்போது பரீட்சார்த்திகள் எடுக்கலாம். பரீட்சார்த்தி சித்தியெய்துகின்ற ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும் ஐந்து பாடங்களிலும் சித்தியெய்துகின்றவர்களுக்கு மாத்திரமே கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தராதரப் பத்திரம் வழங்கப்படும், ஒரே தடவையில் எல்லாப் பாடங்களையும் எடுத்துத் திறமையாகச் சித்தியெய்துபவர்களுக்கு வகுப்புகள் வழங்கப்படும். இப் பயிற்சி நெறிக்குப் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே இப்பயிற்சிநெறி பற்றிய விபரங்கள் அடங்கிய விபர மஞ்சரி தபாலில் அனுப்பி வைக்கப்படும். மேலும் விபரங்களுக்கு கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

**பொறுப்பதிகாரி**

தபால்மூலமமைத்த பயிற்சிநெறித்தொகுதி
ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை
12, 14, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(முற்றொடர்)

# ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை

## நிருவாக அறிக்கை (17-3-1973—25-5-1974)

### (13) பொதுப் பிரச்சினைகள்

#### (1) காகிதாதிகள்.

கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது நாளாந்த தொழில் முயற்சிகளுக்குப்போதிய காகிதாதிகளின்றிக் கஷ்டமடைகின்றன. சில கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைச் சிட்டைகளைத் தயாரிப்பதற்கே காகிதாதிகள்இன்றிக் கஷ்டமடைகின்றனவென அறியவருகின்றது. இவ்விடயம் கௌரவ உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களினதும், கௌரவ கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் அவர்களினதும், இழக்கிலங்கை கடுதாசிக் கூட்டுத்தாபனத்தினதும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

#### (2) ஏற்றுச் செலவு.

பெற்றோல், எரிபொருள் ஆகியவற்றின் விலை அதிகரிப்பினால் கூட்டுறவுச் சங்கங்கள் பொருள் ஏற்றுச் செலவு விடயத்தில் பல கஷ்டங்களுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன. இவ்விடயத்தை நாம் கௌரவ உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம். இப்பொழுது ஏற்றுச் செலவில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதனை இங்கு நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

#### (3) இலாப வீதம் அதிகரித்தல்

இவ்விடயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டு,

இதற்கான நிவாரணம் கூடிய விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

(4) வாகனங்களும், உதிரிப்பாகங்களும் பெறல்

கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரயர் வழங்கும் பிரச்சினை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரயர் விநியோகத்தில் முதன்மை வழங்கப்படல் வேண்டுமெனக் கேட்டுள்ளோம்.

(5) அச்சக வசதிகள்

ஒரு கூட்டுறவுப் பதிப்பகத்தை நிறுவுவதற்கான ஒழுங்குகள் ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையினால் எடுக்கப்பட்டுள்ளது. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் கூட்டுறவு நிறுவனம் எமக்கு ஒரு அச்சியந்திர சாலையை நன்கொடையாக வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

இவ்வச்சியந்திர சாலையை உடன் பெறுவதற்கான ஒழுங்குகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை இங்கு தெரிவிக்க முற்படுகின்றோம்.

வெவ்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகளை இங்கு தெளிவாக எடுத்துக் காட்டுவது இயலாததொன்றாகும். கூட்டுறவுச் சங்கங்களின் சில பொதுவான முக்கியமான பிரச்சினைகளையே இங்கு எடுத்துக் காட்டியுள்ளோம். கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகள் யாவும், ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபைக்குத் தெரிந்தவைகளாகும். பல பிரச்சினைகளுக்கு நாம் கவனம் செலுத்தி நடபடிக்கை எடுத்து வருகின்றோம் என்பதனை இங்கு குறிப்பிட முற்படுகின்றோம்.

நிலம், கட்டடம் திருத்தம்

பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பிரிவில் பல கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. கட்டடங்களுக்குத் திருத்தங்களும் செய்யப்பட்டன.

முன்பிருந்த மாவட்டக் கூட்டுறவுச் சமாசங்கள் கட்டடங்கள் அமைப்பதற்குப் பெற்ற கடன் சுமையும் எங்களால் பொறுப்பேற்கப்பட்டமையால் நாம் சில பிரச்சினைகளுக்குள்ளாக்கப்பட்டோம். தற்பொழுது எமது நிதி நிலைமை சாதகமாக அமைந்திராமையால், நாம் கடன்களைக் கட்டுவதற்கு முடியாத நிலையிலுள்ளோம். எனினும் கூட்டுறவு ஆக்க ஆணையாளரின் உதவியுடன் நாம் கடன்களைக் கட்டுவதற்கு எமது முழு ஆற்றலையும் பிரயோகித்துள்ளோம். கூட்டுறவு நிதி நிலைமை எமக்கு சாதகமாக அமையும் பொழுது, நாம் ஏனைய மாவட்டங்களுக்கு கட்டட வசதிகள் செய்து கொடுக்க முற்படுவோம்.

(1) இரத்தினபுரிக் கட்டடம்

நாம் இரத்தினபுரிக் கட்டடத்தின் கீழ்த் தளத்தையும் இரண்டாவது தளத்தையும் பூர்த்தி செய்து வாடகைக்குக் கொடுத்துள்ளோம். மூன்றாவது தளத்தைப் பூர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளோம்.

(2) சிலாபக் கட்டடம்

இக் கட்டடத்தை நாம் பூர்த்தி செய்துள்ளோம். கராச்சைப் பூர்த்தி செய்வதற்கான ஒழுங்குகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(3) அம்பாந்தோட்டைக் கட்டடம்

இக்கட்டடத்திற்கான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. நீர் விநியோகம், மலசலகூடம் ஆகியன அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(4) நுவர – எலியக் கட்டடம்

நுவர – எலியவில் மாவட்டக் குழுக் காரியாலயம் அமைப்பதற்கான செலவுக் கணிப்பை எடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(5) கல்முனைக் கட்டடம்

கல்முனை மாவட்டக் குழுக் காரியாலயத்திற்கான கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

(6) மாத்தளைக் கட்டடம்

மாத்தளை மாவட்டக் குழுக் காரியாலயக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளதுடன், இதன் முதல் தளத்தை முடிப்பதற்கான செலவைக் கணிக்குமாறு கோரியுள்ளோம்.

(7) காலிக் கட்டடம்

கூட்டுறவு ஆக்க ஆணையாளரின் உதவியுடன் காலிக் கட்டடத்தை திருத்தி, அதற்கு மலசல கூடம் அமைப்பதற்கு வேண்டிய நடபடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்விடயத்தில் தொடர்புடைய திணைக்களங்களுடனும் ஆலோசனை நடத்தப்பட்டது.

(8) மாத்தறைக் கட்டடம்

கூட்டுறவு ஆக்க ஆணையாளரின் விண்ணப்பத்திற்கேற்ப, மாத்தறையில் விசேஷ சந்தைப்படுத்தும் கூட்டுறவு நிறுவனத்தையும், ஒரு மண்டபத்தையும் கட்டுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(9) கண்டி கட்டடம்

கண்டி கட்டடத்தை புனரமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(10) பண்டாரவளைக் கூட்டுறவுப் பயிற்சி நிலையம்

இக்கட்டடத்தைப் புனரமைப்பதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளது.

(11) பொலனறுவைக் கட்டடம்

இலங்கைப் புகையிரத திணைக்களத்துடனும், இலங்கைப் போக்குவரத்துச் சபையுடனும் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டு, கட்டடத்தையும், காணியையும் சொந்த மாக்குவதற்கான நடபடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(12) யாழ்ப்பாணக் கட்டடம்

எதிர்பாராத சம்பவங்களினால் ஏற்பட்ட சேதங்களை நிவர்த்தி செய்து திருத்தியமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனை திருத்துவதற்கான செலவுத் தொகை நிர்ணயிக்கப்பட்டு, கராச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் இதனை திருத்தியமைப்பதற்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

(13) மன்னார் கட்டடம்

இக்கட்டடம் திருத்தப்பட்டு, சுராச்சும் அமைக்கப்பட்டுள்ளது.

(14) வவுனியாக் கட்டடம்

இக்கட்டடத்தை முழுமைப் படுத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

(15) கூட்டுறவுச் சங்கங்களுடன் உள்ள தொடர்பு

பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே, கூடிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள நாம் முயற்சி செய்து வந்துள்ளோம். கூட்டுறவுச் சங்கங்களினால் எமக்குத் தெரிவிக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நாம எமது முழு முயற்சியையும், ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளோம்.

இவ்விடயத்தில் நாம், தலைமைச் சங்கங்களின் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெற்றுள்ளோம். விசேடமாக வெளி விருந்தினர்களை உபசரிப்பதிலும், அவர்களுக்குத் தங்கள் உதவியை நல்குவதிலும் இத் தலைமைச் சங்கங்கள் எமக்குப் பெரிதும் உதவியளித்துள்ளன. அவைகளுக்கு இச் சந்தர்ப்பத்தில் நாம் எமது நன்றிக் கடனைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (வளரும்)

# கேள்விப் பத்திர அறிவித்தல்

## பள்ளிப் பருவம் எய்தாத பிள்ளைகளுக்கான மலகூட அமர்வுத் தட்டுக்களும் வயது வந்தோர்களுக்கான மலகூட அமர்வுத் தட்டுக்களும் பெய்குழாய்களும் — 1975

பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பின்வருவனவற்றை வழங்குவதற்கான கூறுவிலைகள் உதவிப் பணிப்பாளர் (சுற்றுடலும் தொழில் நோய்ச் சுகாதாரமும்), சுகாதார சேவைகள் திணைக்களம், த. பெ. 500, கொழும்பு என்ற முகவரியில் 1974, டிசம்பர் 27 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

1. i. (அ) பள்ளிப் பருவம் எய்தாத பிள்ளைகளுக்கான மலகூட அமர்வு தட்டுக்களுக்கும் பெய்குழாய்களுக்குமான விலை.

(ஆ) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கான செலவுகள்.

(இ) பொது சுகாதார சோதனைகாரரின் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

ii. (அ) வயது வந்தோருக்கான மலகூட அமர்வு தட்டுக்கான விலை.

(ஆ) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

(இ) பொது சுகாதார சோதனைகாரரின் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

iii. (அ) வயது வந்தோருக்கான பெய்குழாயின் விலை.

(ஆ) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

(இ) பொது சுகாதார சோதனைகாரரின் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

iv. (அ) வயது வந்தோருக்கான மலகூட அமர்வு தட்டினதும், பெய்குழாய்க் கூற்றினதும் விலை.

(ஆ) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

(இ) பொது சுகாதார சோதனைகாரரின் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

2. 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மையான அளவு தொகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை வேண்டியபோது நிச்சயப்படுத்திக்கொள்ள, வழங்கப்படும் அமர்வு தட்டு பெய்குழாய் ஒவ்வொரு ஐம்பதின் சார்பிலும் ஒன்று ஒப்பந்தகாரரின் செலவில் உடைத்துப் பரிசோதிக்கப்படும்.

3. பாவிக்கப்படும் கொங்கிறீற் கலவை 1:2:4 ஆகவும், அமர்வு தட்டு ¼ அங்குல இரும்புக் கம்பிகளில் எட்டினைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். பூர்த்தியாக்கப்பட்ட தட்டு ஒப்புரவான முகப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. இத்தீவில் சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் பிரிவுகள் 15 உள்ளன. அவை; கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், கண்டி, பதுளை, மாத்தளை, மட்டக்களப்பு, அனுராதபுரம், வவுனியா, குருநாகலை, யாழ்ப்பாணம்.

5. கேள்விப்பத்திரம் அனுப்பும் எந்தச் சங்கமும், குறித்த சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் பிரிவுக்கோ, அல்லது பிரிவுகளுக்காகவோ அல்லது எல்லாப் பிரிவுகளுக்காகவுமோ அதன் விலை விதங்களைக் குறிப்பதுடன், இப்பொருள்களை அது வழங்க விரும்பும் பிரிவினையும் அப்பொருள்களுக்கான விலை விதங்களையும் வெவ்வேறாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

6. மேலும், ஏதாவது விபரங்கள் முன் குறிப்பிட்டுள்ள சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் பிரிவுகளிலிருந்தோ அல்லது இந்த அலுவலகத்தின் பொது சுகாதார கிளையிலிருந்தோ பெறப்படலாம்.

7. கூறுவிலைகள் யாவும் உதவிப் பணிப்பாளர் (சுற்றுடலும் தொழில் நோய்ச் சுகாதாரமும்), சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த. பெ. 500, கொழும்பு, என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

**எல். என். ராஜேந்திரா,**

சுகாதார சேவைகள் பணிப்பாளருக்காக

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

**அரங்க அமைப்பு　　ஆசன அமைப்பு**

**மின்னொளி அமைப்பு**

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

| | |
|---|---|
| **நாடகம், நடனம்** | |
| இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| பகல் ,, ,, | 200 00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | |
| இரவு ,, ,, | 175-00 |
| பகல் ,, ,, | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | |
| இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் – பகல் அல்லது இரவு** | |
| முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பீணை** இரவு | 150-00 |
| பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238

Published by the Jaffna District Committee, National Co-operative Council of SriLanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation, Ltd.), 12, K.K S. Road, Jaffna and printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna. (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.